புனர்வாழ்வு

# தொலைநிலைப்பாடத்தொகுதி1

## டெலிபிராக்டிஸில் பயன்படுத்த



# MED-ELதொலைநிலைப்பாடத்தொகுதிகளைபற்றிஅறிந்திடுங்கள்

## 1. MED-EL தொலைநிலைப் பாடத் தொகுதி என்றால் என்ன?

MED-EL பாட தொகுதிகளானது விளக்கமான தகவல்கள், பாட திட்டங்கள், அறிவுறுத்தல்கள், சிகிச்சையாளர் குறிப்புகள் மற்றும் வளங்களைக் கொண்டுள்ளன. அவற்றை இங்கே காணலாம் https://blog.medel.pro/. கேட்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குழந்தைகளின் கேட்கும் மற்றும் பேசும் மொழித் திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்துவதுடன் பாடங்களை வழங்க சிகிச்சையாளர்கள் இந்த இலவச வளங்களைப் பயன்படுத்தலாம். MED-EL தொலைநிலைப் பாடத் தொகுதிகளானது, சிகிச்சையாளர்கள் இணையத்தில் பாடங்களை வழங்க பயன்படுத்தக் கூடிய, தகவல் மற்றும் ஒரு பல்நிலை பாட திட்டத்துடன், பாட தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்பாடுகள் ஆகும். தொலைநிலைப் பாடத் தொகுதிகள் கிராமப்புற அல்லது ஊரைவிட்டு தொலைதூரத்தில் உள்ள குடும்பங்களுக்கு அல்லது பாடங்களுக்கான கிளினிக்கிற்கு வருவது கடினமாக உணரும் குடும்பங்களுக்கு டெலிபிராக்டிஸ் ஆதரவை வழங்க பயனுள்ளதாக இருக்கும்.

## 2. குடும்பங்களுக்கு என்ன தேவை?

ஒரு சாதனத்தில் இணையதளத்தின் வழியாக சிகிச்சையாளருடன் குடும்பங்கள் இணைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் பிரிண்ட்டர் வசதி இருப்பது நலம், ஆனால் வளங்களை கிளினிக்கில் அச்சிட்டு, பாட நேரத்திற்கு முன்னமே அனுப்பலாம். குடும்பங்களுக்கு கத்தரிக்கோல், டேப் மற்றும் ஒரு ஸ்டேப்லர் தேவைப்படும். ஒவ்வொரு செயல்பாட்டையும் எவ்வாறு செய்வது என்பதைப் புரிந்துகொள்ள பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் பாடத்திற்கு முன்பே தயாரிப்புக் குறிப்புகளைப் படித்திடுவார்கள்.

## 3. சிகிச்சையாளர் மற்றும் குடும்பத்தினர் இருவருக்கும் வளங்களின் நகல்கள் தேவையா?

ஆம். தங்கள் குழந்தைகளுடன் வீட்டில் வேலை செய்வதற்காக திறன்களை பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் வளர்த்துக் கொள்ள சிகிச்சையாளர்கள் வழிகாட்டுவதும் பயிற்சியளிப்பதுவுமே இதன் குறிக்கோள். சிகிச்சையாளர்கள் கேமரா வழியாக, தாங்களும் ஒரே மாதிரியான பொருட்களைக் வைத்திருக்கின்றனர் என்பதைப் பகிர்வதன் மூலம் குழந்தைகளை ஈடுபாட்டுடன் வைத்திருக்க உதவலாம்.

## 4. பல்நிலை பாட திட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றன?

பாட திட்டங்களில் கேட்பது, பேசும் மொழி, புரிந்துக் கொள்ளுதல் மற்றும் மனக் கோட்பாடுகள் ஆகியவற்றின் குறிக்கோள்களுக்கான பரிந்துரைகள் உள்ளன. ஒவ்வொரு கற்றல் களத்திலும் பல குறிக்கோள்கள் அடையாளம் காணப்படுகின்றன. குழந்தைகள் செயல்படும் நிலையை நிறுவுவதற்கு, சிகிச்சையாளர்கள் தொடர் கண்டறியும் மதிப்பீட்டைப் பயன்படுத்தி, ஒரு படி மேலே உள்ள குறிக்கோள்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். திறன்கள் மற்றும் குறிக்கோள்களின் விரிவான பட்டியல்களுக்கு, MED-EL-ன் ஒரு குழந்தையின் பயணத்தை பார்க்கவும்.

## 5. தொலைநிலைப் பாடத் தொகுதிகள் எந்த வயது மற்றும் திறன் நிலைக்கு ஏற்றவை?

ஒவ்வொரு களத்திலும் உள்ள குறிக்கோள்களானது, MED-EL பாட தொகுதிகளில் அடையாளம் காணப்பட்ட மூன்று நிலை குறிக்கோள்களுக்கு சமமானவை ஆகும். பக்கம் 6-ல் உள்ள "நிலைகளைப் பற்றி அறிக" பகுதியில் கூடுதல் தகவலைக் காணலாம். பெற்றோர்/ பராமரிப்பாளருடன் குழந்தையானது உட்கார்ந்து அரை கட்டமைக்கப்பட்ட விளையாட்டு அடிப்படையிலான செயல்பாடுகளில் ஈடுபட முடிகிறது என்று கருதி சிகிச்சையாளர் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. அது முடியாவிட்டால், பெற்றோர்/ பராமரிப்பாளருக்கு குழந்தை இல்லாமல் பயிற்சி அளிக்கபட்டு, பின்னர் செயல்பாடுகளை கணினி திரையில் இல்லாமல் பிறகு வழங்கலாம். 10 முதல் 12 வயது வரையிலான குழந்தைகள் தொடர்ந்து இந்த செயல்பாடுகளை ரசித்து வருகின்றனர். கேட்பது மற்றும் பேசும் மொழி நிலைகளை மாற்றுவதற்கான பரிந்துரைகள் சிகிச்சையாளர் குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 6. பாட திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள முக்கிய உத்திகள் யாவை?

முக்கிய உத்திகள் என்பது குறிக்கோள்களை அடைய குழந்தைகளுக்கு உதவும் முறையைக் குறிக்கின்றன. தொலைநிலை பாடத்தின் போது பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் முயற்சிக்க வேண்டிய உத்திகளை சிகிச்சையாளர்கள் விளக்கவும், செய்து காட்டவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். பின்னர் சிகிச்சையாளர்கள் உத்தியை பயன்படுத்தியது குறித்து குடும்பத்திற்கு பின்னூட்டத்தையும், பரிந்துரைகள் ஏதும் இருப்பின், அவற்றையும் வழங்குகிறார்கள். உத்திகள் பின்வரும் பக்கங்களில் பட்டியலிடப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொலைநிலை பாடமும் குடும்ப கவனத்தை உருவாக்குவதற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உத்திகளில் கவனம் செலுத்தும். "வீட்டில் புனர்வாழ்வு" என்பதற்கான இணைப்பைப் தொடர்வதன் மூலம் பல உத்திகளை பயன்படுத்திக் காட்டும் குடும்பங்களின் வீடியோக்களைக் காணலாம். https://blog.medel.com/tips-and-tricks/

## 7. சிகிச்சையாளர் குறிப்புகளில் "பெற்றோர்/ பராமரிப்பாளரைப் பயிற்றுவித்தல்" பற்றி ஏன் பல முறை குறிப்பிடப்பட்டுள்ளன?

பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் சிகிச்சையில் அதிக அளவிலான ஈடுபாடு கொண்டிருந்தால் குழந்தைகள் வேகமாக முன்னேறுவார்கள் என்பதை ஆராய்ச்சி காட்டுகிறது. பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதன் மூலம், சிகிச்சையாளர்கள் அறிவை வழங்கலாம், உத்திகள் குறித்த வழிநடத்துதலை வழங்கலாம், உத்திகள் மற்றும் செயல்பாடுகளின் செயல்திறனைப் பற்றிய பின்னூட்டங்களைத் தெரிவிக்கலாம் மற்றும் தேவைப்பட்டால் மாற்றங்களை பரிந்துரைக்கலாம். இந்த வழியில் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் இந்த உத்திகளைப் பயன்படுத்துவதற்கான நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

## 8. அவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம்?

ஸ்லைடு டெக்குகள் என்பது, கதை அல்லது பாடல் புத்தகங்களிலிருந்து படங்கள் மற்றும் உரையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அனிமேஷன் செய்யப்பட்ட பவர்பாயிண்ட் கோப்புகள் ஆகும். ஒவ்வொரு தொலைநிலை தொகுதியிலும் ஒன்று உள்ளது. உள்ளடக்க விநியோக வீதத்தைக் கட்டுப்படுத்த திரை பகிர்வைப் பயன்படுத்த சிகிச்சையாளர்கள் விரும்பலாம். அதற்கு மாற்றாக, குடும்பங்கள் ஸ்லைடு டெக்கை ஒரு டேப்லெட் அல்லது தொலைபேசியில் ஏற்றலாம். (விண்டோஸ் கணினிகள் மற்றும் ஆண்ட்ராய்டு சாதனங்களில்) பவர்பாயிண்ட் அல்லது (ஆப்பிள் சாதனங்களில்) கீநோட் பயன்படுத்தி அனிமேஷன்களைப் பார்க்கலாம். மற்ற பயன்பாடுகளைப் பயன்படுத்தினால், "அனிமேஷன் இல்லை" (NO ANIMATIONS) என்ற பதிப்பைத் தேர்வுசெய்யவும். தமிழ் தவிர பிற மொழிகளைப் பயன்படுத்தும் குடும்பங்களுடன் பணிபுரியும் சிகிச்சையாளர்கள் "எப்படியும் திருத்து" (EDIT ANYWAY) என்பதைத் தேர்ந்தெடுத்து உரையை மொழிபெயர்ப்பதன் மூலம் வளத்தைத் தனிப்பயனாக்க முடியும்.

© பதிப்புரிமை MED-EL 2020

# தொலைநிலை சிகிச்சையை (டெலிபிராக்டிஸ்) அறிமுகம்

## அடிப்படை ஏற்பாடுகள்

1. நீங்களும் குடும்பத்தினரும் பயன்படுத்தும் தொழில்நுட்ப வகையைப் பற்றி மதிப்பாய்வு செய்யுங்கள்.
   குடும்பத்திற்கான அடிப்படை தேவைகள்:
   - கணினி (அல்லது கணினி இல்லை என்றால் டேப்லெட்/ தொலைபேசி)
   - வெப் கேமரா + மைக்ரோஃபோன் (கணினி அல்லது தொலைபேசியில் உள்ளது அல்லது தனியாக உள்ளது)
   - அதிவேக இணைய இணைப்பு

   மேற்கூறியவற்றைத் தவிர சிகிச்சையாளரின் அடிப்படை தேவைகள்:
   - மைக்ரோஃபோனுள்ள ஹெட்செட்
2. வீடியோ கான்ஃபரன்சிங் கருவிகளை மதிப்பாய்வு செய்து, எது விரும்பத்தக்கது என்பதை தீர்மானிக்கவும்.
3. எந்தவொரு தொழில்நுட்ப சிக்கல்கள் வந்தாலும் அதை தீர்க்க உங்களுக்கு உதவக்கூடிய ஒரு நபரை அடையாளம் காணவும்.

## திட்டமிடப்பட்ட தொடக்கத்திற்கு ஒரு வாரம் முன்பு

1. தேர்ந்தெடுக்கப்பட்ட வீடியோ கான்ஃபரன்சிங் குறித்த கருவியின் பொருத்தமான தொழில்நுட்பமும் புரிதலும் குடும்பமானது கொண்டிருப்பதை உறுதிப்படுத்தவும்.
2. சிகிச்சை அறையைத் தயார் செய்யவும்.
   சிகிச்சை அறைக்கான அடிப்படை தேவைகள்:
   - அமைதியான தனி அறை
   - உங்களது முகத்தில் நல்ல வெளிச்சம் கிடைக்கப்பெறும் வண்ணம் மேசை மற்றும் கேமராவை வைக்கவும்
   - பின்னணியில் கவனச்சிதறல்களை ஏற்படுத்தும் காட்சிகளை குறைத்தல் (ஒற்றை வர்ணம் பூசப்பட்ட சுவர் விரும்பப்படுகிறது)
3. பாட திட்டம் மற்றும் அச்சிடுவதற்கான வேறு எந்த காகித வளங்களையும் மின்னஞ்சல் செய்யவும் (அல்லது குடும்பத்திற்கு தேவைப்பட்டால் அச்சிட்டு அஞ்சல் செய்யவும்).
4. தொழில்நுட்பம் தயாராக உள்ளது மற்றும் குடும்பத்திற்கு தேவையான வளங்கள் (பாட திட்டத்தில் பட்டியலிடப்பட்ட காகிதம் மற்றும் பிற வளங்கள் இரண்டும்) உள்ளன என்பதை உறுதிப்படுத்த ஒரு சோதனை அழைப்பை நடத்துங்கள் .
5. பாடத்திற்கு பொருத்தமான பாட நேரத்தை தீர்மானிக்கவும்.

## முந்தைய நாள்

1. ஒவ்வொரு செயல்பாட்டிலும் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்காக பாடத்திற்கு முன் தயாரிப்பு வழிமுறைகளைப் படிக்க பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு செயல்பாட்டிலும் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்காக பாடத்திற்கு முன் தயாரிப்பு வழிமுறைகளைப் படிக்க பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
2. பாடத்திற்குத் தேவையான அனைத்து வளங்களையும் தயார் செய்யுங்கள். *(சிகிச்சையாளர் மற்றும் குடும்பத்தினர் இருவரும் ஒரே மாதிரியான அல்லது ஒத்த வளங்களைக் கொண்டிருக்கும்போது பெரும்பாலான செயல்பாடுகள் சிறப்பாக செயல்படும்.)*
3. உங்களுக்கு தொழில்நுட்ப உதவி செய்யும் நபர் தயாராக இருப்பதை உறுதிப்படுத்தவும்.

## பாடம்

1. குடும்பத்தை அழைத்திடுங்கள்.
2. நல்லுறவை ஏற்படுத்த சிறிது நேரம் ஒதுக்கி, ஆடியோ மற்றும் காட்சி இணைப்பு நன்றாக இருக்கிறதா என்று சோதிக்கவும்.
3. பாட திட்டத்தின் செயல்பாடுகள் அனைத்தையும் குடும்பத்திற்கு வழிகாட்டி, பயிற்சியளிக்கவும்.
   தொலைநிலை சிகிச்சையின் அடிப்படைக் கொள்கைகள்:
   - செயல்பாட்டின் குறிக்கோள்களை விளக்குங்கள்
   - உத்திகள் செய்து காட்டுங்கள், அவற்றை எப்படி, ஏன் செய்கிறீர்கள் என்பதை விளக்குங்கள் (கேமராவைப் பார்ப்பதை நினைவில் கொள்ளுங்கள்)
   - குடும்பத்தை ஒவ்வொருவராக முன் வரச் சொல்லி, கவனமாக அவதானிக்க ஊக்குவிக்கவும், இதனால் நீங்கள் அவர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும்
     - அவர்கள் என்ன சிறப்பாக செய்தார்கள் என்று அடையாளம் காணுங்கள்
     - குழந்தை எவ்வாறு பதிலளித்தது என்பது பற்றி பேசுங்கள்
     - நல் மாற்றங்களை பரிந்துரைக்கவும் (ஏதேனும் இருந்தால்)
4. தொகுத்து, விவாதத்துடன் முடிக்கவும்.
5. ஏதேனும் தொழில்நுட்ப சிக்கல்கள் இருக்கிறதா என்பது குறித்து குடும்பத்தினரிடமிருந்து கருத்துக்களைத் நாடுங்கள்.

© பதிப்புரிமை MED-EL 2020

# கேட்கும்திறன்களைவளர்ப்பதற்கானமுக்கியஉத்திகள்

### முக்கிய உத்திகள் யாவை?

பின்வரும்பக்கங்களில்விவரிக்கப்பட்டுள்ளஉத்திகள் குழந்தையின்கேட்கும்திறனைமேம்படுத்துவதற்கும், பின்னர், கேட்கும்சாதனம்(களை)பயன்படுத்திபேசும் மொழிதிறன்களைமேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. சிகிச்சையாளர்கள்மற்றும் ஆசிரியர்கள்ஒவ்வொருபாடத்திலும்பலவிதமான உத்திகளைசெய்துகாட்டவும், குழந்தையானதுகேட்பது மற்றும்பேசும்மொழியைவாழ்க்கையின்அனைத்து அம்சங்களிலும்ஒருங்கிணைக்கஉதவுவதற்காக, வீட்டு சூழலில்இந்தஉத்திகளைப்பயன்படுத்துவதில் பராமரிப்பாளர்களுக்குபயிற்றுவிக்கவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### விழித்திருக்கும் அனைத்து நேரங்களிலும் நேரலையில் இருப்பது

குழந்தை விழித்திருக்கும் எல்லா நேரங்களிலும் குழந்தையின் கேட்கும் சாதனம்(கள்) ஆன் செய்யப்பட்டு வேலை செய்யும். ஒவ்வொரு சாதனத்திலும் அவை சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த ஒரு செயல்பாட்டு கேட்கும் சோதனை (லிங் சவுண்ட் சோதனை) செய்யப்படுகிறது.

### என் அருகில் வாருங்கள்

செவிபுலன் சமிக்ஞை தெளிவாக இருப்பதை உறுதிசெய்ய குழந்தையின் ஆடியோ செயலிக்கு அருகில் செல்ல பேச்சாளர் ஒரு சிரத்தையான முயற்சியை மேற்கொள்வார். ஆரம்ப நிலையிலுள்ள கேட்கும் நபர்களுக்கு உகந்த தூரம் 30 முதல் 50 செ.மீ வரை இருக்கும்.

### கேட்கச் செய்ய கவனம் ஈர்க்கும் வழிகள் (Auditory Hooks)

பார்!, ஆஹா!, ஐயோ! போன்ற உற்சாகமான சொற்கள் குழந்தையின் செவிவழி கவனத்தை ஈர்க்க அழுத்தத்துடன் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வார்த்தைகளானது மூளையின் செவிப்புலன் பகுதியை, அடுத்து என்ன சொல்லப்படப் போகிறது என்பதைக் கேட்கத் தயாராக இருக்க தூண்டுகின்றன.

### பேசு, பேசு, பேசு

குழந்தை கற்றுக்கொள்வதற்கும் இறுதியில் அப்படியே நடந்துக் கொள்வதற்கும் ஏராளமான மொழி மாதிரிகள் வழங்கப்பட்டுள்ளன. பேசுபவர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள், பார்க்கிறார்கள், கேட்கிறார்கள், சிந்திக்கிறார்கள் (சுய பேச்சு) என்பது குறித்துப் பேசுவதற்கும், குழந்தை எதைப் பார்க்கிறது, செய்கிறது, எதை பெரும்பாலும் கேட்கிறது, என்ன சிந்திக்கின்றது (இணையான பேச்சு) என்பது குறித்துப் பேசுவதற்கும் ஒரு சிரத்தையான முயற்சியை மேற்கொள்வார்கள்.

### ஒரே சிந்தனை இடம்

குழந்தை என்ன நினைக்கிறது என்பதை அடையாளம் காண பேசுபவர் ஒரு சிரத்தையான முயற்சியை மேற்கொணடு, அந்த எண்ணங்களை வார்த்தைகளாக மாற்ற கருத்துகளை வழங்குவார். ஒரு எடுத்துக்காட்டு என்னவென்றால், குழந்தை வெளியில் பார்த்துக் கொண்டிருந்தால், பேசுபவர், "நீங்கள் வெளியே விளையாட விரும்புகிறீர்கள் என்று நினைக்கிறேன் என்று கருத்து தெரிவிக்கலாம். ஆனால்... அச்சோ! மழை பெய்கிறதே."

### ஒலி அழுத்தம் (Acoustic Highlighting)

பேசும் மொழியைக் கேட்பதற்கு மிகவும் சுவாரஸ்யமானதாக்க பேசுபவரால் பல நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நுட்பங்களானது, அதிக சுருதி மாறுபாடு (ஏற்ற இறக்க சத்தம்), சற்று மெதுவான வீதம், வேண்டுமென்றே இடைநிறுத்தங்களைப் பயன்படுத்துதல் மற்றும் முக்கியமான சொற்களை ஒரு சொற்றொடரின் முடிவில் வைப்பது அல்லது வித்தியாசமாக சொல்வதன் ஆகியவற்றைக் கொண்ட குழந்தை போன்ற பேச்சின் (Child Directed Speech or Parentese) மூலம் முக்கியத்துவம் அளித்தல்.

### கேட்பது முதலில்

மூளையின் செவிப்புலன் பகுதி ஒலிகளிலிருந்தும் குரலிலிருந்தும் தூண்டுதலைப் பெறுவதை உறுதிசெய்ய குழந்தைக்கு பார்வை அல்லது தொடுதல் மூலம் பிற தகவல்கள் வழங்கப்படுவதற்கு முன்பு பேசும் சொற்களைக் கேட்பது வருகிறது. இந்த உத்தியானது குழந்தையின் பேசும் மொழியைப் கவனிக்கவும் இறுதியில் புரிந்துகொள்வதற்கும் உதவுகிறது. ஒரு எடுத்துக்காட்டு, ஒரு பொம்மையை ஒரு மென்மையான பையில் மறைத்து வைத்து, அதை குழந்தைக்குக் காண்பிக்கும் முன் அதைப் பற்றி பேசுவது.

### சமிக்ஞை மற்றும் சத்தம் விகிதம் - கேட்கும் சூழல்

பேச்சாளரின் குரலை விட பின்னணி இரைச்சல் கணிசமாக மென்மையாக இருப்பதை உறுதிசெய்ய சூழலில் உள்ள கூறுகள் வேண்டுமென்றே மற்றும் தெரிந்தே கையாளப்படும். எடுத்துக்காட்டாக, போக்குவரத்து சத்தத்தின் தாக்கத்தைக் குறைக்க ஜன்னல்கள் மூடப்பட்டு, டிவிகள் மற்றும் இசை அணைக்கப்படும். உகந்த கேட்கும் நிலைமைகளில், பேச்சாளரின் குரல் பின்னணி இரைச்சலை விட 15 முதல் 25 dB வரை சத்தம் அதிகமாக இருக்கும்.

### காத்திருங்கள், காத்திருங்கள் & இன்னும் கொஞ்சம் காத்திருங்கள்

பேசுபவர் ஏராளமான மொழி மாதிரிகளை (பேசு, பேசு. பேசு) வழங்குவார், பின்னர் உரையாடலில் குழந்தை தன் பங்கை வழங்குவதற்கு ஊக்குவிக்கும் எதிர்பார்ப்புடன் காத்திருப்பார். அமைதியாக காத்திருத்தல், குழந்தையை நோக்கி சாய்வது, சிரிப்பது மற்றும் தலையாட்டுதல் ஆகியவற்றின் மூலம் குழந்தை பேசும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்துதல்.

© பதிப்புரிமை MED-EL 2020

# கேட்கும் திறன்களை வளர்ப்பதற்கான முக்கிய உத்திகள்

### நாசவேலை

*குழந்தை தொடர்புகொள்வதற்கான வாய்ப்பை வழங்க ஒரு சிக்கல் அல்லது சவாலான சூழ்நிலை உருவாக்கப்படுகிறது அல்லது அடையாளம் காணப்படுகிறது. குழந்தை பிரச்சினை பற்றி முயற்சித்து பேசும் அல்லது பிரச்சினையைத் தீர்க்க உதவி கேட்கும் என்பதே எதிர்பார்ப்பு. குழந்தை அடைய முடியாத அளவு உயரத்தில் குழந்தைக்குப் பிடித்த பொம்மையை வைப்பது, ஒரு எடுத்துக்காட்டு.*

### விரிவாக்கம் மற்றும் நீட்சி

*குழந்தையின் சொல் சரியான இலக்கண குறிப்பான்கள் மூலம் மீண்டும் உச்சரிக்கப்படுகிறது (விரிவாக்கம்) அல்லது மற்றொரு தகவலுடன் சேர்க்கப்படுகிறது (நீட்சி) . எடுத்துக்காட்டாக, குழந்தை "குழந்தை குளியல்" என்று சொன்னால், "ஆம், இது குழந்தையின் குளியல்," என்பது ஒரு விரிவாக்க பதில். "ஆம், குழந்தையை குளிக்கச் செய்வோம்," என்பது ஒரு நீட்சிப் பதில்,*

### செவிபுலன் பின்னூட்ட வளையம் (Auditory Feedback Loop)

*பேச்சாளர் சொன்ன ஒலி, சொல் அல்லது சொற்றொடரின் மாதிரியை திரும்ப செய்ய குழந்தை முயற்சிக்கும் என்ற ஒரு எதிர்பார்ப்பு அமைக்கப்படுகிறது. இந்த உத்தியானது குழந்தைகளுக்கு சரியான உச்சரிப்பை முதலில் கேட்கவும், பின்னர் அவர்கள் அதற்குப் பிறகு சொல்வதை ஒப்பிட்டுப் பார்க்கவும் வாய்ப்பளிக்கிறது. தெளிவான பேச்சினை வழங்குவதன் மூலம், குழந்தையானது பேச்சாளரை போன்று பேச முயற்சிக்கும் என்ற எதிர்பார்ப்பு அமைக்கப்பட்டு, காத்திருத்தல் (காத்திரு, காத்திரு, இன்னும் கொஞ்சம் காத்திரு).*

### என் குரலுக்கு மதிப்புள்ளது!

*ஒரு ஒலி அல்லது வார்த்தையை உருவாக்க குழந்தை செய்யும் ஒவ்வொரு சிறிய முயற்சியும் அங்கீகரிக்கப்பட்டு, மதிப்பளிக்கப்படுகிறது. இந்த அங்கீகரித்தலானது குழந்தைகளுக்கு அவர்களின் குரலைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது, மேலும் அதிகமாகப் பேசுவதற்கான உந்துதலையும் வழங்குகிறது. சொல் அல்லது சொல்லை ஒட்டியதை தெளிவாகத் திரும்பச் சொல்வதன் மூலம் இந்த உத்தியை விரிவாக்கம் மற்றும் நீட்சியுடன் இணைக்கவும்.*

### தேர்வுகளைப் பயன்படுத்துங்கள்

*குழந்தையானது ஒரு முடிவை எடுத்து, பின்னர் அதை திரும்ப செய்வதற்காக, ஒரு தேர்வுக் கேள்வியில் மொழி மாதிரிகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, "உங்களுக்கு ஒரு ஆப்பிள் வேண்டுமா அல்லது வாழைப்பழம் வேண்டுமா?" அல்லது மிகவும் மேம்பட்ட குழந்தைக்கு, "உங்களுக்கு ஒரு பெரிய சிவப்பு ஆப்பிள் வேண்டுமா அல்லது சிறிய பச்சை ஆப்பிள் வேண்டுமா?"*

### செவிபுலன் ஞாபகத்தை கட்டியெழுப்புதல் (Build Auditory Memory)

*குழந்தையின் திறன்கள் வளரும்போது, குழந்தையானது எத்தனை தகவல்களைக் கேட்க முடியும் மற்றும் நினைவில் கொள்ள முடியும் என்பதை நீட்டிக்க ஒரு சிரத்தையான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பல ஆண்டுகளாக கேட்கும் அனுபவத்தினால், ஒரு வாக்கியத்தின் முடிவில் ஒரு முக்கியமான தகவலிலிருந்து, இறுதியில் ஒரு வாக்கியம் அல்லது வாக்கியங்களில் பதிக்கப்பட்ட நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட தகவல்கள் படிப்படியாக அதிகரிக்கிறது. படிநிலை 1 செவிபுலன் ஞாபகப் பணியின் ஒரு எடுத்துக்காட்டு, "நாயைக் கண்டுபிடி." படிநிலை 4 செவிபுலன் ஞாபகப் பணியின் ஒரு எடுத்துக்காட்டு, "அப்பாவின் சாவிகளை புத்தகத்தின் கீழ் மறைத்திடு."*

### செவிபுலன் நிறைவு (Auditory Closure)

*ஒரு பழக்கமான பாடல், சொற்றொடர் அல்லது வாக்கியமானது குழந்தைகள் அவற்றை அடையாளம் காண முடியும் மற்றும் அதை சேர்ந்து செய்ய முடியும் என்பதை நிரூபிக்க ஒரு வாய்ப்பாக பயன்படுத்தப்படுகிறது. பேச்சாளர் பாடல், சொற்றொடர் அல்லது வாக்கியத்தைத் தொடங்கி, முடிவுக்கு முன்பே நிறுத்தி, குழந்தை வார்த்தைகளை முடிக்கக் காத்திருப்பார். எடுத்துக்காட்டாக பேச்சாளர், "அம்மா இங்கே வா வா...." என்று பாடுவது.*

### இசை, இசை, இசை

*குழந்தைக்கு இசை மற்றும் பாடல்களை கற்றுக்கொடுக்க, ஒரு சிரத்தையான முயற்சி, குறிப்பாக குழந்தைகளின் எளிய பாடல்கள் மற்றும் ரைம்களின் வடிவத்தில், மேற்கொள்ளப்படுகிறது. பாடுவது என்பது ஒலி அழுத்தத்தின் ஒரு இயற்கையான வடிவமாகும். இது மூளையின் பல பகுதிகளைத் தூண்டுகிறது. குழந்தைகளின் பாடல்களை திரும்பத் திரும்ப பாடுவது, புதிய சொற்களஞ்சியம் மற்றும் வாக்கிய கட்டமைப்புகளைக் கற்றுக்கொள்வதை எளிதாக்குகிறது.*

### புத்தகங்கள், புத்தகங்கள், புத்தகங்கள்

*கூட்டாக புத்தகம் வாசிப்பது என்பது கதை வாசிப்பின் போது ஒரு வயதுவந்தோர் குழந்தையை கலந்துக் கொள்ள ஊக்குவிக்கும் ஒரு செயல்முறை ஆகும். இது குழந்தையின் சொற்களஞ்சியம் மற்றும் வாக்கிய கட்டமைப்புகள், பொது அறிவு ஆகியவற்றை விரிவாக்கவும், பிறரின் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நம்பிக்கைகளைப் புரிந்துக்கொள்ளவும், அத்துடன் கல்வியறிவு திறன்களை வளர்த்துக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது. பேச்சாளர் ஒரு பக்கத்தில் ஒன்று அல்லது இரண்டு கருத்துகளைத் தெரிவிப்பதும், பின்னர் குழந்தைக்கு தன் முறை வரும் போது கருத்து தெரிவிப்பதற்கு காத்திருப்பது கூட்டாக புத்தகம் வாசிக்கும் உத்தியின் எடுத்துக்காட்டாகும். புத்தகப் பகிர்வு வழக்கமான அடிப்படையில் செய்ய ஊக்குவிக்கப்படுகிறது.*

© பதிப்புரிமை MED-EL 2020

MED-EL

# நிலைகளைப் பற்றி அறிந்திடுங்கள்

கேட்கும் குறிக்கோள்களைக் குறிக்கிறது

பேசும் மொழி குறிக்கோள்களைக் குறிக்கிறது

புரிதல் மற்றும் மனக் கோட்பாட்டின் குறிக்கோள்களின் குறிக்கிறது

## ஒரு நிலையை எவ்வாறு தேர்வு செய்வது

| | கேட்கும் | பேசும் மொழி | புரிதல் |
|---|---|---|---|
| நிலை 1 | குழந்தையானது தகவலின் 1 அலகினை கேட்கவும், கவனிக்கவும், புரிந்துகொள்ளவும் கற்றுக்கொள்கிறது. பேசும் மொழி குழந்தைக்கு எளிய குறுகிய வாக்கியங்களில் வழங்கப்படுகிறது மற்றும் புதிய தகவல்களுக்கு குழந்தை கவனிக்க ஒலி அழுத்த நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. | ஒற்றை சொற்களைப் பயன்படுத்தும் குழந்தையானது, 200 சொற்கள் வரையான சொற்களஞ்சியம் கொண்டிருக்கும், சொற்களை 2-வார்த்தை கோர்வைகளாக இணைக்கத் தொடங்கலாம். குழந்தையானது பலவிதமான உயிரெழுத்துகளையும் மெய் எழுத்துக்களையும் பயன்படுத்தத் தொடங்குகிறது. | புரிதல் (cognition) என்பது நம் உலகத்தைப் பற்றிய அறிவையும் புரிதலையும் நாம் எவ்வாறு கற்றுக் கொள்கிறோம் என்பதைக் குறிக்கிறது. பிராக்மாடிக்ஸ் (pragmatics) எனும் ஆங்கிலச் சொல் மொழியின் சமூகப் பயன்பாட்டைக் குறிக்கிறது, இது ஊடாடும் தகவல்தொடர்புடன் பெரிதும் இணைக்கப்பட்டுள்ளது. பிராக்மாடிக்ஸ் (pragmatics) எனும் ஆங்கிலச் சொல் மொழியின் சமூகப் பயன்பாட்டைக் குறிக்கிறது, இது ஊடாடும் தகவல்தொடர்புடன் பெரிதும் இணைக்கப்பட்டுள்ளது. இது [1} மனக் கோட்பாட்டினை {2] (Theory of Mind -ToM) உள்ளடக்குகிறது. ToM என்பது நம்முடைய சொந்த நடத்தை மற்றும் பிறரின் நடத்தையை விளக்குவதற்கும் கணிப்பதற்கும் காலப்போக்கில் நாம் உருவாக்கும் சிந்தனை திறன்களைக் குறிக்கிறது. சில புரிதல் மற்றும் ToM திறன்கள் வளர்ச்சி தொடர்பானது; குழந்தை வளரும்போது அவை உருவாகின்றன. மேலும், பல புரிதல், ToM மற்றும் மொழித் திறன்களுக்கு இடையிலான உறவு சிக்கலானது, இவை ஒவ்வொன்றும் குழந்தையின் ஆரம்ப ஆண்டுகளில் மாறுபட்ட அளவுகளில் மற்றொன்றுக்கு பங்களிப்பு செய்கின்றன. நிலை 1-ல் செயல்படும் வளர்ந்த குழந்தைகள் ஏற்கனவே மேம்பட்ட புரிதல் மற்றும் ToM திறன்களைக் கொண்டிருக்கலாம். தங்களை வெளிப்படுத்திக்கொள்ள வலுவான மொழித் திறன்கள் அவர்களுக்கு தேவைப்படலாம். மாறாக, நிலை 3-ல் செயல்படும் இளைய குழந்தைகள் ToM குறிக்கோள்கள் சிலவற்றை சிந்திக்க வளர்ச்சி ரீதியாக தயாராக இருக்க மாட்டார்கள். |
| நிலை 2 | குழந்தையானது தகவல்களின் 2 அலகுகளை கேட்கவும், கவனிக்கவும், புரிந்துகொள்ளவும், கற்றுக்கொள்கிறது. பேசும் மொழி நீண்ட வாக்கியங்களில் வழங்கப்படுகிறது மற்றும் வாக்கியத்தில் உள்ள அனைத்து தகவல்களிலும் கவனிப்பதற்கு குழந்தையை ஊக்குவிக்க ஒலி அழுத்த நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. | குழந்தை 2- முதல் 3-வார்த்தை கோர்வைகளை உருவாக்குகிறது, 200 முதல் 2000 சொற்களின் சொற்களஞ்சியம் கொண்டுள்ளது, மேலும் சில இலக்கண குறிப்பான்களைப் பயன்படுத்தத் தொடங்குகிறது. குழந்தை அனைத்து உயிரெழுத்துக்களையும், ஆரம்ப காலத்தில் உருவாகும் மெய்யெழுத்துக்களையும் பயன்படுத்துகிறது. | |
| நிலை 3 | குழந்தை இப்போது நல்ல கேட்கும் திறனுள்ளதாக இருக்கிறது, அது தகவல்களின் 3 அலகுகளை கவனிக்கவும், புரிந்துகொள்ளவும் நினைவில் கொள்ளவும் கற்றுக் கொள்கிறது. பேசும் மொழி பல்வேறு சிக்கலான வாக்கியங்களில் வழங்கப்படுகிறது மற்றும் வாக்கியத்தில் உள்ள இலக்கண கூறுகளைக் கவனிப்பதற்கு குழந்தையை ஊக்குவிக்க ஒலி அழுத்த நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. | குழந்தை 4- முதல் 5-வார்த்தை உள்ள வாக்கியங்கள் மற்றும் கேள்விகளை உருவாக்குகிறது, 2000 க்கும் மேற்பட்ட சொற்களின் சொற்களஞ்சியத்தைக் கொண்டுள்ளது, மேலும் பலவிதமான இலக்கண குறிப்பான்களைப் பயன்படுத்துகிறது. குழந்தை பிற்காலத்தில் உருவாகும் மெய் எழுத்துக்களில் நிபுணத்துவம் பெறுகிறது. | |

© பதிப்புரிமை MED-EL 2020

தொலைநிலை பாட தொகுதி பாட திட்டம்

MED-EL

தேதி: ..................................................

பெயர்: ........................................................................................................... வயது: .................. H.A: ..................

| செயல்பாடு | குறிக்கோள்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 ஒலிகள்: | இடது | ஆ | ஊ | ஈ | ஷ் | ஸ் | ம் |
| | சரி | ஆ | ஊ | ஈ | ஷ் | ஸ் | ம் |

| | கேட்டல் | பேச்சு | அறிவாற்றல் |
|---|---|---|---|
| விலங்கு பொருத்தம்<br>**வளங்கள்**<br>• விலங்குகள் A1 ஸ்பின்னர்<br>• விலங்குகள் A1 | • அடையாளம் காண்கிறது:<br>· பெயர் + ஒலியிலிருந்து விலங்கினை<br>· பெயரிலிருந்து விலங்கினை<br>· விளக்கத்திலிருந்துவிலங்கினை<br>• விலங்கு + இல்லை என்பதைப் புரிந்துகொள்கிறது | • தன் முறை வரும் போது செயல்படும் செயல்பாட்டில் ஈடுபடுவதற்கு வார்த்தைகள் அல்லது ஒலிகளைப் பயன்படுத்துகிறது | • ஒத்த படங்களை பொருத்துகிறது<br>• தன் முறை வரும் போது செயல்படும் செயல்பாட்டில் ஈடுபடுகிறது |
| விலங்கு பாகங்கள் மர்மம்<br>**வளங்கள்**<br>• விலங்குகள் A2 | • அடையாளம் காண்கிறது:<br>· விலங்கின் பெயர்கள் அல்லது ஒலி<br>· விலங்கின் உடல் பாகங்கள்<br>• பேசு பொருளில் எளிய அறிவுறுத்தல்களை புரிந்துகொள்கிறது | • விலங்குகளின் பெயர்கள் அல்லது ஒலிகளை அடையாளம் காண்கிறது<br>• விலங்குகளின் பாகங்களை மீண்டும் சொல்கிறது<br>• விலங்குகள் மற்றும் அவற்றின் பாகங்களைப் பற்றி பேச வார்த்தை கோர்வைகளைப் பயன்படுத்துகிறது | • முழு படத்தின் ஒரு பகுதியை அடையாளம் காண்கிறது<br>• நினைக்கிறேன் என்ற வார்த்தையின் அர்த்தம் பேச்சாளருக்கு உறுதியாக தெரியவில்லை என்பதை புரிந்துகொள்கிறது |
| விலங்கு என்ன சாப்பிடுகிறது?<br>**வளங்கள்**<br>• விலங்குகள் A3 | • அடையாளம் காண்கிறது:<br>· விலங்கின் பெயர்கள்<br>· உணவுப் பொருட்கள்<br>· வினை: சாப்பிடு<br>• பேசு பொருளில் 'அல்லது' எனும் வார்த்தையினை புரிந்துகொள்கிறது | • விலங்குகள் மற்றும் உணவை அடையாளம் காண்கிறது<br>• தேர்வுக் கேள்விக்கு பதிலளிக்கிறது<br>• விலங்குகள் சாப்பிடுவதைப் பற்றி பேச வார்த்தைகளை கோர்க்கிறது | • பொருட்களுக்கு இடையிலான தொடர்பைப் புரிந்துகொள்கிறது |
| WHAT COULD THAT BE HIDING FROM ME?<br>**வளங்கள்**<br>• விலங்குகள் A4 | • கதையை கவனிக்கிறது<br>• கேட்பதன் மூலம் மட்டும் ஒரு வாக்கியத்திலிருந்து தகவல்களை அடையாளம் காண்கிறது | • யூகிக்க ஒரு சொல் அல்லது ஒலியைப் பயன்படுத்துகிறது<br>• ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் சில சொற்களை மீண்டும் கூறுகிறது. | • ஆச்சரியத்தையும் நகைச்சுவையையும் புரிந்துகொள்கிறது |

கலந்துரையாடல் தலைப்பு: “விழித்திருக்கும் எல்லா நேரமும் நேரலையில்?” என்ற குறிக்கோளுடன் குடும்பம் எவ்வாறு செயல்படுகிறது?

© பதிப்புரிமை MED-EL 2020

செயல்பாடு

# 1. விலங்கு பொருத்தம்

## தயாரிப்பு

இலகுரக அட்டையில் வளத்தை அச்சிடுங்கள்.
பட அட்டைகள், ஸ்பின்னர் மற்றும் அம்பு ஆகியவற்றை வெட்டுங்கள்.
அம்பு மற்றும் ஸ்பின்னரின் மையத்தில் ஒரு துளை செய்யுங்கள்.
இரண்டினூம் ஊடே பிளவு பின்னை செருகவும்.

## வளங்கள்

- விலங்குகள் A1 ஸ்பின்னர்
- விலங்குகள் A1
- கத்தரிக்கோல், பிளவு பின்

## அறிவுறுத்தல்கள்

நீங்கள் ஒவ்வொருவரும் முறை எடுத்து செயல்படும் ஞாபகசக்தி விளையாட்டை விளையாடப் போகிறீர்கள்.

1. சிகிச்சையாளர் மற்றும் குடும்பத்தினர் இருவரும் பட அட்டைகளை, படங்கள் முகம் கீழே இருக்கும் வண்ணம், தங்கள் மேசையில் பரப்புகிறார்கள்; அவற்றை வரிசைகளில் அடுக்குங்கள்.
2. சிகிச்சையாளர் அம்பினை தட்டிவிட்டு, நீங்கள் இருவரும் கண்டுபிடிக்க வேண்டிய விலங்கின் பெயரைக் கூறி தொடங்குகிறார். இந்த பணி எளிதானது என்றால், விலங்குக்கு பெயரிடுவதற்கு பதிலாக அதை விவரிக்கவும். அது கடினமாக இருந்தால், ஒரு விலங்கு ஒலியைச் சேர்க்கவும்.
3. அறிவுறுத்தலை மீண்டும் சொல்லி, காத்திருப்பதன் மூலம் குழந்தை புரிந்துகொள்கிறதா என்று பெற்றோர்/ பராமரிப்பாளர் சோதிப்பார்கள் (எ.கா., ஓ நாம் பன்றியைக் கண்டுபிடிக்க வேண்டும்.
4. புரிந்துகொள்ள குழந்தைக்கு கூடுதல் உதவி தேவைப்பட்டால், விலங்கினை குறிப்பிட்டு காட்டும் ஸ்பின்னரை அம்புடன் சிகிச்சையாளர் கேமரா அருகே பிடித்து, அறிவுறுத்தலை மீண்டும் சொல்லலாம்.
5. பெற்றோர்/ பராமரிப்பாளர் ஒரு பன்றிக் கண்டுபிடிக்கப்படும் வரை அட்டைகளைத் திருப்ப குழந்தையுடன் செயல்படுவார். சிகிச்சையாளரும் அதையே செய்வார். ஒருவருக்கொருவர் காண்பிக்க அதை கேமரா அருகே பிடித்து, பின்னர் இந்த அட்டை முகம் மேல்பக்கமாக இருக்கும் படி வைத்து, வேறு எந்த அட்டைகளையும் மீண்டும் முகம் கீழே திருப்புங்கள்.
6. பின்னர் விளையாடும் அனைவரும் கண்டுபிடிப்பதற்கான விலங்கை அழைக்க குழந்தை ஸ்பின்னரை சுழற்ற முறை எடுக்கும்.
7. ஒரே விலங்குகளில் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டதும், இவை எவ்வாறு பொருந்துகின்றன என்பதைப் பற்றி பேசுங்கள்; அவை ஒரு ஜோடி மற்றும் அவற்றைப் போன்று வேறு இந்த விளையாட்டில் இல்லை.
8. அந்த படம் ஸ்பின்னரில் மீண்டும் ஒரு முறை வந்தால், மீண்டும் சுழற்றுங்கள்.

---

### முக்கிய உத்திகள்

பின்னணி சத்தத்தை குறைத்திடுங்கள்: நீங்கள் இந்த பாடத்தைத் தொடங்குவதற்கு முன், சிகிச்சையாளர் மற்றும் குடும்பச் சூழலில் உள்ள சத்தத்திற்கான மூலங்களைக் கண்டறிந்து, முடிந்தவரை குறைக்கவும்.

நிறைய பேசுங்கள்: நிறைய முறை கூறுவது இந்தச் செயல்பாட்டின் முக்கியமான சொற்களை குழந்தையானது கவனிக்க உதவும். பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் படங்களை மேசையில் வைக்கும் போதும், அவற்றைத் திருப்பும்போதும், விலங்குகளின் பெயர்களைத் திரும்பத் திரும்பச் சொல்லும் போதும், பொருந்தும் அட்டையைத் தேடும் போதும் படங்களைப் பற்றி நிறைய பேசுங்கள். ஓ, இது குதிரை அல்ல… ஓ பார்! அவை பொருந்துகின்றன! நாங்கள் குதிரையைக் கண்டுபிடித்துவிட்டோம் … நமக்கு ஜோடி கிடைத்துவிட்டது.

---

### முக்கிய உத்திகள்

பின்னணி சத்தத்தை குறைத்திடுங்கள்: சிறந்த ஒலி சமிக்ஞைக்கு சிகிச்சையாளர் வெளிப்புற மைக்ரோஃபோனுடன் ஹெட்ஃபோன்களை பயன்படுத்துகிறார்.

நிறைய பேசுங்கள்: சிறந்த ஒலி நிலைமைகளில் மொழியைக் கேட்க குழந்தைக்கு இரண்டாவது வாய்ப்பை வழங்க நீங்கள் சொல்வதை கேட்டு பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்களை அதை திருப்பிச் சொல்லிட வழிகாட்டுங்கள். சுழற்றுவதற்கான குழந்தையின் முறை வரும் போது, குழந்தையானது அம்பு நிற்கும் விலங்கினை அடையாளம் காண்பதற்கான அதன் முயற்சிக்கு எவ்வாறு காத்திருக்க வேண்டும் என்பதைப் பெற்றோருக்குப் பயிற்றுவிக்கவும், தேவைப்பட்டால் குழந்தை பேசுவதை விளக்கவும். குழந்தை உடனடியாக விலங்கை அடையாளம் காணவில்லை என்றால், “நிறைய பேசுங்கள்” உத்தியை பயன்படுத்தி ஒரு முறை செய்து காட்டிட பெற்றோருக்குப் பயிற்சியளிக்கவும், “அது என்ன?” போன்ற கேள்விகளைத் தவிர்க்கவும். கேள்விகள் குழந்தைக்கு கற்பிப்பதை விட அதை சோதிக்கின்றன. ஓ, அம்பு குதிரையின் மீது நின்றது… நாம் குதிரையைக் கண்டுபிடிக்க வேண்டும். குதிரையைக் கண்டுபிடிக்க (சிகிச்சையாளரின் பெயர்)-இடம் சொல்லுங்கள்.

---

### முக்கிய உத்தி


நிறைய பேசுங்கள்: என்ன நடக்கிறது என்றும் குழந்தை எதை கவனிக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்பதையும் விளக்குவதற்கு எப்படி மொழி மாதிரிகளை வழங்குவது என்பதில் பெற்றோர்/ பராமரிப்பாளர்களை பயிற்றுவியுங்கள். சரி, இப்போது சுழற்றுவதற்கு நம்முடைய முறை. தயார், சுழற்றுவோம்… நன்றாக சுழற்றினோம். இப்போது இந்த ஆட்டினை போன்ற ஒரு அட்டை நமக்குத் தேவை, ஒன்றைக் கண்டுபிடிக்க (சிகிச்சையாளரின் பெயர்)-இடம் சொல்லுங்கள். ஆடு எங்கே உள்ளது என்று உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்.


---

© பதிப்புரிமை MED-EL 2020

MED-EL

# 1. விலங்கு பொருத்தம்















© பதிப்புரிமை MED-EL 2020

பரிந்துரைக்கப்பட்ட காகிதம்: A4, 250 கிராம்

# 1. விலங்கு பொருத்தம்

© பதிப்புரிமை MED-EL 2020

செயல்பாடு

# 2. விலங்கு பாகங்கள் மர்மம்

## தயாரிப்பு

இலகுரக அட்டையில் வளத்தை அச்சிடுங்கள்.
பக்கத்தின் அடிப்பகுதியில் உள்ள விலங்குகளின் பாகங்களுடன் துண்டுகளை வெட்டவும்.
மீதமுள்ள விலங்குகளின் பக்கங்களை மேசையில் வைக்கவும்.

## வளங்கள்

- விலங்குகள் A2
- குழந்தைகளின் கத்தரிக்கோல்

## அறிவுறுத்தல்கள்

நீங்கள் ஒரு யூகிக்கும் விளையாட்டை விளையாடப் போகிறீர்கள்.

1. பெற்றோர்/ பராமரிப்பாளர்கள் விலங்கு பாகங்கள் அட்டைகளை வெட்டும்போது தங்கள் குழந்தையுடன் பேசுவார்கள் (சிகிச்சையாளர் விலங்குகளின் பாகங்களின் அட்டைகளை ஒரே நேரத்தில் வெட்டுகிறார்).
2. விலங்குகளின் பாகங்களை மேசையில் பரப்பி விலங்குகளின் பக்கத்திற்கு கீழே வைக்கவும்.
3. சிகிச்சையாளர் ஒரு விலங்கு பாகத்தை தேர்ந்தெடுப்பதன் மூலம் தொடங்கி அதைப் பற்றி பேசுவார். பெற்றோர்/ பராமரிப்பாளர் சிகிச்சையாளர் கூறும் மொழியை மீண்டும் கூறி, அதே போன்ற ஒன்றைக் கண்டுபிடிக்க குழந்தையை ஊக்குவிப்பார்.
4. உங்களிடம் அதே மாதிரியானது உள்ளதா என்பதைச் சரிபார்க்க விலங்கு பாகங்களின் படத்தை கேமரா அருகே பிடித்து, பின்னர் விலங்கின் மீது வைக்கவும்.
5. விலங்குகளின் பாகங்களைத் தேர்ந்தெடுத்து அதைப் பற்றி பேசிட, முறைகள் எடுத்திடுங்கள்.

---

முக்கிய உத்தி

நிறைய பேசுங்கள்: குழந்தையின் கேட்கும் நிலைக்கு ஏற்ப இந்தச் செயல்பாட்டை மாற்றியமைத்திடுங்கள். குழந்தை ஒரு ஆரம்ப நிலை கேட்பவராக இருந்தால், விலங்கு பாகங்கள் அட்டைகளை படம் தெரியுமாறு வைத்து, முதலில் விலங்கை அடையாளம் காணுங்கள், தேவைப்பட்டால் ஒலியுடன், பின்னர் உடல் பாகத்தை அடையாளம் காணுங்கள். குழந்தை மிகவும் அனுபவம் வாய்ந்த கேட்பவராக இருந்தால், விலங்கு பாகங்கள் அட்டைகளை படமுள்ள பக்கம் கீழே பார்த்து வைத்து தொடங்குங்கள். நீங்கள் சொல்வதை திரும்ப சொல்லி, குழந்தை பார்ப்பதைப் பற்றி கருத்துக் கூறி, குழந்தை என்ன நினைக்கிறது என்று சிந்திக்கச் சொல்லி, இந்தச் செயல்பாட்டின் போது பெற்றோர்/ பராமரிப்பாளரைப் நிறைய பேசுவதற்கு நீங்கள் பயிற்றுவியுங்கள். எனவே நாயின் மூக்கினை (சிகிச்சையாளரின் பெயர்) சொல்வதை நான் கேட்டேன். சரி, இந்த அட்டைகளைத் திருப்பி, நாயின் மூக்கைக் கண்டுபிடிக்க முடியுமா என்று பார்ப்போம். தயார், நாயின் மூக்கைக் கண்டுபிடி. ஓ, பொறுங்கள், அது நாயின் மூக்கு அல்ல. அது எலியின் மூக்கு; நமக்கு நாயின் மூக்கு தேவை.

---

முக்கிய உத்தி

நிறைய பேசுங்கள்: தேர்வுசெய்து பேசுவதற்கு குழந்தையின் முறை வரும்போது, குழந்தை திரும்ப பேச பொருத்தமான அளவிலான மொழி மாதிரியை வழங்க, நிறைய பேசுங்கள் உத்தியை பயன்படுத்துவது குறித்து பெற்றோர்/ பராமரிப்பாளருக்கு பயிற்சி அளிக்கவும். குழந்தை பேச தொடங்கினால், பெற்றோர்/ பராமரிப்பாளர் விலங்கை அடையாளம் காட்டி, குழந்தையை திரும்ப சொல்ல ஒரு ஒலியுடன் இணைக்கலாம். நீங்கள் முயலின் ஒரு பாகத்தை எடுத்துள்ளீர்கள் என்று நினைக்கிறேன். தாவு. தாவு. முயலைக் கண்டுபிடிக்க (சிகிச்சையாளரின் பெயர்)-இடம் சொல்லுங்கள்; தாவு. தாவு. இது முயலின் கண்… ஆம், கண். அதை திரும்ப சொல்ல முயற்சிப்பதற்கு காத்திருங்கள். அல்லது குழந்தை மிகவும் மேம்பட்டதாக இருந்தால், குழந்தை திரும்ப சொல்வதற்காக சொல் கோர்வைகளை பெற்றோர்/ பராமரிப்பாளர் செய்து காட்ட ஊக்குவிக்கவும். இது பசுவின் கால் போல் தெரிகிறது. பசுவின் காலைக் கண்டுபிடிக்க (சிகிச்சையாளரின் பெயர்)-இடம் சொல்லுங்கள்.

---








முக்கிய உத்தி

நிறைய பேசுங்கள்: நிறைய பேசுங்கள்: உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்பதைக் காட்ட "நினைக்கிறேன்" வார்த்தையை எப்படி பயன்படுத்துவது என்று செய்து காட்டுங்கள். அதை எப்படி செய்வது, அது ஏன் முக்கியம் என்று பெற்றோர்/ பராமரிப்பாளருக்கு பயிற்சி அளிக்கவும். "நினைக்கிறேன்" என்பது ஒரு மனதின் நிலை பற்றிய வினைச்சொல் மற்றும் அது தங்களின் மனக் கோட்பாடுகளை வளர்க்க அது குழந்தைகளுக்கு உதவுகிறது. ஒவ்வொரு நபரும் தங்களுக்கென சொந்த எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள் மற்றும் சில சமயங்களில் இந்த எண்ணங்கள் நம்முடைய சொந்த எண்ணங்களிலிருந்து வேறுபட்டிருக்கலாம் என்பதை புரிந்து கொள்ளும் திறனை மனக் கோட்பாடு உள்ளடக்கியிருக்கும். ஓ எனக்கு உறுதியாகத் தெரியவில்லை… இது பன்றியின் வால் என்று நினைக்கிறேன்.

---


© பதிப்புரிமை MED-EL 2020


# 2. விலங்கு பாகங்கள் மர்மம்

© பதிப்புரிமை MED-EL 2020

# 2. விலங்கு பாகங்கள் மர்மம்





© பதிப்புரிமை MED-EL 2020

செயல்பாடு

# 3. விலங்கு என்ன சாப்பிடுகிறது?

## தயாரிப்பு

இலகுரக அட்டையில் வளத்தை அச்சிடுங்கள்.
புதிர் துண்டுகளை வெட்டி அவற்றை 2 குழுக்களாக பிரிக்கவும்; ஒன்று விலங்குகளுக்கும், ஒன்று உணவுக்கும் (மீனை தேடுங்கள்; அது உணவு!).
பெற்றோர்/ பராமரிப்பாளர் விலங்குகளின் குவியலை எடுத்து குழந்தைக்கு உணவைக் கொடுப்பார்.
விளையாடும் ஒவ்வொருவரும் அனைத்து படங்களையும் காணும் படி அட்டைகளை பரப்புவார்கள்.
சிகிச்சையாளர் இரு குவியல்களையும் தனித்தனியாக வைத்து அட்டைகளை பரப்புவார்.

## வளங்கள்

- விலங்குகள் A3
- கத்தரிக்கோல்

## அறிவுறுத்தல்கள்

நீங்கள் விலங்கை அதன் உணவுடன் பொருத்தப் போகிறீர்கள்.

1. சிகிச்சையாளர் ஒரு விலங்கைத் தேர்வுசெய்து, பெற்றோர்/ பராமரிப்பாளரிடம் எதைக் கண்டுபிடிப்பது என்று கூறுகிறார் (குழந்தை அதை கேட்க ஊக்குவிக்கவும்).
2. பெற்றோர்/ பராமரிப்பாளர் விலங்குகளின் பெயரை மீண்டும் கூறி, அதைக் கண்டுபிடித்து, பின்னர் அந்த விலங்கு என்ன சாப்பிடும் என்பதைக் குழந்தையிடம் கேட்பார்.
3. குழந்தை அந்த விலங்குக்கான உணவைத் தேடி, அதைப் பற்றி பேசி, புதிர் துண்டுகளை ஒன்றாக வைக்கிறது.
4. உங்களிடம் ஒரே ஜோடி இருக்கிறதா என்பதை சரிபார்க்க புதிர் துண்டுகளை கேமரா அருகே பிடிக்கவும்.
5. பின்னர் குழந்தை ஒரு உணவுப் பொருளைத் தேர்வுசெய்து, சிகிச்சையாளரைக் கண்டுபிடிப்பதற்காக அதை அடையாளப்படுத்தி, அதை உண்ணும் விலங்கினைக் கோருகிறது.
6. பெற்றோர்/ பராமரிப்பாளர் மற்றும் சிகிச்சையாளர் அந்த உணவை உண்ணும் விலங்கைத் தேடி, கண்டுபிடித்து அதைப்பற்றி பேசுகிறார்கள்.
7. எல்லா அட்டைகளும் முடிவடையும் வரை முறை எடுத்து, தேர்வு செய்து, அடையாளம் கண்டு, கோரவும்.

---

### முக்கிய உத்தி

நிறைய பேசுங்கள்: சத்தமாக சிந்திப்பதன் மூலம் பெற்றோர்/ பராமரிப்பாளருக்கு எப்படி "நிறைய பேசுவது" என்பதைப் பயிற்றுவிக்கவும், அதாவது என்ன நடக்கிறது என்பதோடு வரும், என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும், அடுத்து என்ன நடக்கும் என்பதைப் பற்றியும் சிந்திக்கும் போது வரும் வார்த்தைகள் அனைத்தையும் விவரிப்பது ஆகும். "பூனையைக் கண்டுபிடி" என்று (சிகிச்சையாளரின் பெயர்) சொன்னதை நான் கேட்டேன், எனவே நான் பூனையைத் தேடுகிறேன். ஹ்ம்ம்... பூனை. சரி, பூனை அதோ இருக்கிறது. நான் பூனையைக் கண்டுப்பிடித்துவிட்டேன். இப்போது பூனை என்ன சாப்பிடும் என்பதை தேடுவோம். உங்களது அட்டைகளைப் பாருங்கள்... பூனை என்ன சாப்பிட விரும்பும் என்று யோசிக்கிறேன்? ஒருவேளை குழந்தை தவறான உணவை எடுக்கலாம். சரியான தேர்வு செய்வதைப் பற்றி விவாதிக்க மொழி மாதிரிகளை வழங்குவதற்க்கு "நிறைய பேசுங்கள்" உத்தியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து பெற்றோருக்கு பயிற்சி அளிக்கவும். ஓ, இது பூனையின் உணவு அல்ல... பார், புதிர் பொருந்தவில்லை. பூனை என்ன சாப்பிடும் என்பதை நாம் மீண்டும் தேட வேண்டும்.

---

### முக்கிய உத்திகள்

*நிறைய பேசுங்கள்: ''நிறைய பேசுங்கள்'' உத்தியின் ஒரு முக்கிய பகுதி அதிக கருத்துகளைத் தெரிவிப்பதும் குறைவான கேள்விகளைக் கேட்பதும் ஆகும். கேள்விகளானது குழந்தையை ஒரு பரிட்சைப் போல உணரச் செய்யும் சூழ்நிலையில் வைக்கின்றன. பேசுவது கற்பித்தல் ஆகும். கேள்விகளை எப்படி கருத்துகளாக மாற்றுவது என்பதை பெற்றோர்/ பராமரிப்பாளருக்கு பயிற்றுவிக்கவும். பூனை உண்ணும் உணவை ஒன்றாக தேடுவோம். பூனை என்ன சாப்பிடும் என்று எனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். சில பூனைகளுக்கு மீன் சாப்பிட பிடிக்கும்.*

*தேர்வுகளை பயன்படுத்தவும்: சில வகையான கேள்விகள் பயனுள்ளதாக இருக்கும். ஒரு தேர்வுக் கேள்வியாக மொழியை பயன்படுத்துவது குழந்தைக்கு உடனடி மொழி மாதிரியை வழங்குகிறது, இது பார்த்து செய்வதை எளிதாக்குகிறது மற்றும் ஒரு பரிட்சையைப் போல தோன்றாது. குழந்தையின் உணர்த்தும் மொழி திறனுக்கு ஏற்ப தேர்வுக் கேள்வியை மாற்றவும். ஒற்றை சொற்களை உருவாக்குவதில் குழந்தை வேலை செய்கிறதென்றால், தேர்வில் ஒரு வார்த்தைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கவும். பூனை எதை உண்ணும் என்று நினைக்கிறீர்கள் வைக்கோல் அல்லது மீன்? குழந்தை சொற்களை இணைப்பதில் செயல்பட்டால், பூனை வைக்கோல் உண்ணும் என்று நினைக்கிறீர்களா அல்லது பூனை மீன் உண்ணும் என்று நினைக்கிறீர்களா? அல்லது குழந்தை மேம்பட்ட இலக்கண கட்டமைப்புகளைப் பயன்படுத்தத் தொடங்கினால், தேர்வுக் கேள்வியை நீட்டிக்கவும். பூனைக்கு வைக்கோல் சாப்பிட பிடிக்கும் என்று நினைக்கிறீர்களா அல்லது பூனைக்கு மீன் சாப்பிட பிடிக்கும் என்று நினைக்கிறீர்களா?*

---

### முக்கிய உத்தி


*நிறைய பேசுங்கள்: சொற்களுக்கு இடையிலான உறவைப் புரிந்துகொள்ள குழந்தைகளுக்கு நாம் உதவினால், அவர்கள் அவற்றை நினைவில் வைத்திருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதை சொற்களஞ்சிய வளர்ச்சியைப் பற்றிய ஆராய்ச்சி காட்டுகிறது. குழந்தையின் உலகத்தைப் பற்றிய தகவல்களையும், அவை புதிர் துண்டுகளோடு எவ்வாறு தொடர்புடையது என்பதையும் வழங்க, நிறைய பேசுங்கள் உத்தியை பயன்படுத்த பெற்றோர்/ பராமரிப்பாளரைப் பயிற்றுவிக்கவும். சூப்பர் மார்க்கெட்டில் பூனை உணவு கேனில் ஒரு மீனின் படத்தைப் பார்த்தோம் என்பது ஞாபகம் இருக்கிறதா?*


---


© பதிப்புரிமை MED-EL 2020


# 3. விலங்கு என்ன சாப்பிடுகிறது?

















© பதிப்புரிமை MED-EL 2020


# 3. விலங்கு என்ன சாப்பிடுகிறது?













© பதிப்புரிமை MED-EL 2020

பரிந்துரைக்கப்பட்ட காகிதம்: A4, 250 கிராம்

செயல்பாடு

# 4. என்னிடமிருந்து மறைந்திருப்பது என்ன?

## தயாரிப்பு

வளத்தை காகிதத்தில் அச்சிடுங்கள் அல்லது ஒரு சாதனத்தில் வளத்தின் மின்னணு பதிப்பை ஏற்றவும். பக்கங்களை வெட்டி, புத்தகமாக அடுக்கி, பக்கங்களை ஒன்றாக இணைக்கவும்.

மின் பதிப்பைப் பயன்படுத்தினால், சிகிச்சையாளர் புத்தகத்தை ஏற்றி, திரையைப் பகிரலாம் அல்லது பெற்றோர் செயல்பாட்டை வழிநடத்தும் போது தங்கள் சொந்த சாதனத்தில் பின்தொடரலாம்.

### வளங்கள்

- விலங்குகள் A4 (பிரிண்ட்அல்லதுஸ்லைடுடெக்)
- கத்தரிக்கோல்
- ஸ்டேப்லர்

## அறிவுறுத்தல்கள்

பெற்றோர்/ பராமரிப்பாளர் குழந்தையுடன் தனியாக புத்தகத்தைப் படிப்பதன் மூலம் செயல்பாட்டை வழிநடத்துவார். சிகிச்சையாளர் அதை கவனித்து, தேவைப்பட்டால், பெற்றோர்/ பராமரிப்பாளருக்கு கீழே உள்ள உத்திகள் குறித்து பயிற்றுவிப்பார்.

1. அட்டைப் படம் பற்றியும், சிறுவன் என்ன செய்கிறான் என்பதைப் பற்றியும் பெற்றோர்/ பராமரிப்பாளர் பேசுவர்.
2. பெற்றோர்/ பராமரிப்பாளர் முதல் கேள்வி பக்கத்தைப் படித்து விலங்கு என்னவென்று யூகிப்பர்.
3. பெற்றோர்/ பராமரிப்பாளர் சிகிச்சையாளரிடம் அவர் என்ன நினைக்கிறார் என்று கேட்பார்கள், பின்னர் குழந்தையை யூகிக்கச் சொல்வார்கள்.
4. பெற்றோர்/ பராமரிப்பாளர் பக்கத்தைத் திருப்புவர், படத்தை மறைத்து வைத்திருக்கும்போது, விலங்குக்கு முக்கியத்துவம் கொடுத்து உரையைப் படிப்பர். விலங்கின் பெயரை மீண்டும் சொல்லவும், பின்னர் படத்தைப் பார்க்கவும் குழந்தை ஊக்குவிக்கப்படும்.
5. படம் மற்றும் யூகங்களைப் பற்றி நிறைய பேச பெற்றோர்/ பராமரிப்பாளர் கேள்வி பக்கத்திற்குத் திரும்பவும் செல்வர்.
6. பெற்றோர்/ பராமரிப்பாளர் புத்தகத்தின் இறுதி வரை இந்த நடவடிக்கையை தொடர்ந்து நடத்துவர்.

---

### முக்கிய உத்திகள்

*நிறைய பேசுங்கள்:* புத்தக வாசிக்கும் போது குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கவும், வைத்திருக்கவும் "நிறைய பேசுங்கள்" உத்தியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் பெற்றோர்/ பராமரிப்பாளர்கள் பயிற்றுவியுங்கள். இந்த புத்தகத்தைப் படிக்க, அவர்கள் எவ்வளவு ஆர்வமாகவும், உற்சாகமாகவும் உள்ளார்கள் என்பதைக் காட்டலாம், ஆச்சரியங்களைச் சேர்ப்பதன் மூலமும், மனதின் நிலை வினைச்சொற்களைப் பயன்படுத்துவதன் மூலமும் விலங்குகள் எதை மறைக்கின்றன என்பதைக் கண்டறியலாம். ஐயோ! பெட்டியில் என்ன மறைந்திருக்கிறது என்று நான் வியக்கிறேன். ஹ்ம்ம், அது ஒரு குரங்காக இருக்கலாம் என்று நினைக்கிறேன். ஓ! இது ஒரு குரங்கு என்று நம்புகிறேன். எனக்கு குரங்குகளை பிடிக்கும்.

*கேட்பது முதலில்:* கேட்பது முதலில் உத்தி மூலம் தகவல்களை வழங்குவது மூளையின் செவிப்புலன் பகுதிக்கு நரம்பியல் பாதையை மேம்படுத்த உதவுகிறது. ஆரம்ப நிலையில் உள்ள கேட்போருக்கு, ஒவ்வொரு பக்கத்தையும் படிக்கும்போது குழந்தையின் பார்வைக்கு வெளியே படத்தை வைத்திருக்க முயற்சி செய்ய பெற்றோர்/ பராமரிப்பாளரைப் பயிற்றுவிக்கவும், பின்னர் படங்களை குழந்தையுடன் பகிர்ந்து மீண்டும் பேசவும். தங்களது குழந்தைகளின் கேட்கும் மற்றும் பேசும் திறன் வளரும்போது, பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்கள் படங்களை பகிர்வதற்கு முன்பு தங்கள் குழந்தை சில சொற்களை மீண்டும் சொல்லும் வரை காத்திருக்கலாம்.

---

### முக்கிய உத்தி

*நிறைய பேசுங்கள்:* தங்கள் குழந்தையின் தற்போதைய தன்னிச்சையான வெளிப்பாட்டு மொழி நிலைக்கு மேலே மொழி மாதிரிகளை எவ்வாறு முன்னிலைப்படுத்துவது என்று பெற்றோர்/ பராமரிப்பாளர்களுக்கு பயிற்றுவிக்கவும். தங்கள் குழந்தை சொல்ல விரும்பும் வார்த்தை அல்லது வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் அவர்கள் அதைச் செய்யலாம். எடுத்துக்காட்டாக, குழந்தை ஒற்றை சொற்களை மட்டும் வளர்த்து வந்தால், இது ஒரு பூனை என்று நான் நினைக்கிறேன். என்று யூகம் இருக்கலாம், குழந்தை சொற்களை இணைக்கத் தொடங்கினால், தொப்பியின் கீழ் அது ஒரு பூனை என்று நினைக்கிறேன். குழந்தை நீண்ட வாக்கியங்களைப் பயன்படுத்துகிறது என்றால், தொப்பியின் கீழ் ஒரு பூனை ஒளிந்துக் கொண்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். உங்களது யூகத்தைக் பெற்றோர்/ பராமரிப்பாளர் கேட்டிட ஊக்குவிக்கவும், இதனால் நீங்கள் அதே மொழி கட்டமைப்புகளை செய்துக் காட்டலாம். வேறொரு விலங்கை யூகிப்பது வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கலாம் என்பதை குழந்தை புரிந்துகொள்ள உதவும். இரண்டு யூகங்களைக் கேட்டபின், குழந்தையை யூகிக்கச் சொல்லி கேட்கலாம்.

---

### முக்கிய உத்தி

*நிறைய பேசுங்கள்:* புத்தகம் முழுவதும் எதிர்பார்த்தது மற்றும் எதிர்பாராதவற்றைப் பற்றி பேச பெற்றோர்/ பராமரிப்பாளரைப் பயிற்றுவிக்கவும். ஒரு மரத்தின் பின் ஒரு நாய் இருப்பது அசாதாரணமானது அல்ல, எனவே ஒரு கருத்து இப்படி இருக்கலாம், [1]ஓ, ஆம், நான் ஒரு மரத்தின் பின்னால் ஒரு நாயைக் பார்த்திருக்கிறேன்... ஆனால் ஒரு படகில் ஒரு ஆடு என்பது ஆச்சரியமாக இருக்கும்! பிறகு ஒரு மரத்தில் மீது ஒரு குதிரை, அது வேடிக்கையானது. குழந்தை தங்கள் உலகத்தைப் பற்றி மேலும் உணர்ந்து கொள்ளவும், நகைச்சுவையை அடையாளம் கண்டு ரசிக்கவும் உதவிட படங்கள் ஏன் வேடிக்கையானவை அல்லது எதிர்பாராதவை என்பதைப் பற்றி பேசுவதற்கு பெற்றோர்/ பராமரிப்பாளருக்கு வழிகாட்டவும்.

---

© பதிப்புரிமை MED-EL 2020


2. என்னிடமிருந்து மறைந்திருப்பது என்ன?

# என்னிடமிருந்து மறைந்திருப்பது என்ன?




© பதிப்புரிமை MED-EL 2020

பரிந்துரைக்கப்பட்ட காகிதம்: A4, 250 கிராம்




# தொப்பியின் கீழ் மறைந்திருப்பது என்ன?

© பதிப்புரிமை MED-EL 2020




# மரத்தின் பின்னால் மறைந்திருப்பது என்ன?

© பதிப்புரிமை MED-EL 2020



# தொப்பியின் கீழ் இருப்பது ஒரு பூனை.

© பதிப்புரிமை MED-EL 2020



மரத்தின் பின்னால்
இருப்பது ஒரு நாய்.



# பெட்டியின் உள்ளே மறைந்திருப்பது என்ன?

© பதிப்புரிமை MED-EL 2020



பெட்டியின் உள்ளே
இருப்பது ஒரு நரி.

© பதிப்புரிமை MED-EL 2020




வீட்டின் அருகே
மறைந்திருப்பது என்ன?

© பதிப்புரிமை MED-EL 2020




வீட்டின் அருகில்
இருப்பது ஒரு எலி.




# படகில்
# மறைந்திருப்பது என்ன?

© பதிப்புரிமை MED-EL 2020



படகில்
இருப்பது ஒரு ஆடு.

© பதிப்புரிமை MED-EL 2020




# மரத்தின் மேல் மறைந்திருப்பது என்ன?


© பதிப்புரிமை MED-EL 2020



அது ஒரு தேனீ அல்ல,




ஒரு ஈயும் அல்ல,



# கடலில் இருந்து ஒரு ஆமையும் அல்ல.

© பதிப்புரிமை MED-EL 2020



# அது ஒரு குதிரை, ஆமாம்!

© பதிப்புரிமை MED-EL 2020

## MED-EL Offices Worldwide


### AMERICAS

Argentina
medel@medel.com.ar

Canada
officecanada@medel.com

Colombia
office-colombia@medel.com

Mexico
office-mexico@medel.com

United States
implants@medelus.com

### ASIA PACIFIC

Australia
office@medel.com.au

China
office@medel.net.cn

Hong Kong
office@hk.medel.com

India
implants@medel.in

Indonesia
office@id.medel.com

Japan
office-japan@medel.com

Malaysia
office@my.medel.com

Philippines
office@ph.medel.com

Singapore
office@sg.medel.com

South Korea
office@kr.medel.com

Thailand
office@th.medel.com

Vietnam
office@vn.medel.com

### EMEA

Austria
office@at.medel.com

Belgium
office@be.medel.com

Finland
office@fi.medel.com

France
office@fr.medel.com

Germany
office@medel.de

Italy
ufficio.italia@medel.com

Portugal
office@pt.medel.com

Spain
office@es.medel.com

South Africa
customerserviceZA@medel.com

United Arab Emirates
office@ae.medel.com

United Kingdom
customerservices@medel.co.uk


M00043


MED-EL India Private Limited

#505, Fifth Floor, Pragati House, 47-48 | Nehru Place, New Delhi- 110019
Tel: +91-41607171, Fax: +91-11-41642800, Toll Free Phone: 1-800-11-6262
E-mail: India.implant@medel.com, CIN: U33112DL2006FTC155131

medel.com